# மரணத்திற்குப் பின்.......

எல்லாம் வல்ல அல்லாஹ் மனிதனை படைத்தான். மனிதனை காலமெல்லாம் உலகில் வாழ வைக்காமல் ஒரு குறிப்பிட்ட நாட்கள் மட்டும் வாழ வைத்து பிறகு வல்ல அல்லாஹ் மரணமடைய செய்கின்றான் மனிதனை. மனிதனை மட்டும் அல்லாமல் அவன் படைத்த அனைத்து படைப்புகளும் மரணத்தை அடையக் கூடியவைகளாக இருக்கின்றன. ஆனால் மனிதனை மட்டும் இவ் உலகில் வாழும் போது அவனை வணங்கவும், அவனின் தூதர்களை பின்பற்றி நல்லடியார்களாக வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் மரணித்துவிட்டபின், மனிதனுக்கு மட்டும் சிறப்பம்சமாக மரணத்திற்கு பின் ஒரு சிறந்த வாழ்க்கையை 'மறுமை வாழ்க்கையை வழங்கி உள்ளான். நல்லவர்களுக்கு சுவர்க்கத்தையும், தீயவர்களுக்கு நரகத்தையும் சித்தப்படுத்தி உள்ளான்.

இவ் உலகில் வாழும் போது மனிதர்களாகிய நாம் குறிப்பாக முஸ்லிம்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை குர்ஆன், ஹதீஸ் மூலம் நாம் அறிந்து செயல்பட்டு வருகிறோம் அல்ஹம்துவில்லாஹ். நாம் மரணம் அடைந்த பிறகு நாம் எப்படி மறுமையில் இருப்போம் என்பதையும், மரணித்த பிறகு செய்ய வேண்டிய அமல்கள் பற்றியும் இக்கட்டுரை மூலம் பார்ப்போம்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான் மனிதனின் படைப்பு பற்றி.

மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனை பயந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான். ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து அவரிலிருந்து அவர் மனைவியை படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து அநேக ஆண், பெண்களை படைத்து பரவச் செய்தான். அந்த அல்லாஹ்வுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள்.

*(அல்குர்ஆன் 4:1)*

மனிதர்களும், பிற உயிரினங்களும் மரணமடையும் என்பதை அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுகித்தே தீரும்; நன்மை/தீமை செய்யக்கூடிய நிலையில் நாம் உங்களை வைத்து சோதிக்கிறோம். பின்னர் நீங்கள் நம்மிடமே கொண்டு வரப்படுவீர்கள்.

*(அல்குர் ஆன் 31:35)*

நிச்சயமாக நாம் தாம் உயிர்ப்பிக்கின்றோம், இறக்குமாறும் செய்கின்றோம். நம்மிடமே (யாவரும்) வர வேண்டியிருக்கின்றது.

*அல்குர்ஆன் 50:43*

*அல்குர்ஆன் 50:43*

மேற்கண்ட வசனங்களில் மரணத்தை பற்றியும், அல்லாஹ் நம்மை இவ் உலகில் வாழ வைத்து நன்மை தீமை செய்ய வைத்து நம்மை சோதிக்கின்றான் என்பதையும் விளங்கலாம்.

பெரிய மகான்கள், நபிமார்கள், நல்லடியார்கள் மரணிக்க மாட்டார்கள், என்று சிலர் கருதி வருகின்றார்கள். நபி(ஸல்) அவர்கள் இறந்த போது கூட உமர்(ரழி) அவர்கள் கூறினார்கள் 'யாராவது நபி(ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று கூறினால் அவர்கள் தலையை கொய்துவிடுவேன்' என்று நீட்டிய வாளுடன் நின்றார்கள். இரண்டு பிரிவினர்கள் இரு நிலைகளில் இருந்த சமயத்தில் அபூபக்கர் (ரழி) அவர்கள் அங்கு வந்து நிலமையை பார்க்கிறார்கள். பிறகு அல்லாஹ்வின் 3:144 வசனத்தை ஓதிய பிறகு உமர்(ரழி) தன் வாளை கீழே போடுகின்றார்கள். சஹாபாக்கள் அந்த அளவுக்கு குர்ஆனின் கட்டளைக்கு கட்டுப்பட்டவர்களாக இருந்தார்கள். இந்தக் காலமாக இருந்தால் அந்த வசனத்திற்கு சொந்தக் கருத்தை புகுத்தி முஸ்லிம்களை இரண்டு பிரிவுகளாக்கி இருப்பார்கள். பிரிவினைவாதிகள் சிந்திக்க வேண்டிய சம்பவம் இது. மேலும் அல்லாஹ்வும் நபிமார்களும் மரணிப்பவர்களே என்று கூறுகிறான்.

முஹம்மது (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஒரு தூதரேயன்றி (இறக்காமல் இருக்க கூடிய ஆண்டவன் அல்ல.) அவருக்கு முன்னரும் (இவ்வாறே) தூதர்கள் சென்றிருக்கின்றனர்.

*(அல்குர்ஆன் 3:144)*

யாதோர் ஆத்மாவும் அதற்கு குறிப்பிடப்பட்ட அல்லாஹ்வின் கட்டளையின்றி இறப்பதில்லை.

(அல்குர்ஆன் 3:145)

அல்லாஹ் நிரந்தர மரணத்தை பற்றி கூறினாலும், நாம் தூங்கும் போது கூட அல்லாஹ் நம் ரூஹை கைப்பற்றி விட்டு பிறகு நம் உடலில் நம் ரூஹை (உயிரை) நுழைப்பதாக தன் திருமறையில் கூறுகின்றான். அது மட்டுமல்ல மக்களுக்கு இந்த வசனத்தில் பல படிப்பினை இருப்பதாகவும் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்.

மனிதர்கள், இறக்கும் பொழுதும், இறக்காமல் நித்திரையில் இருக்கும் பொழுதும், அல்லாஹ்வே அவர்களுடைய உயிரை கைப்பற்றுகிறான். பின்னர் எவர்கள் மீது மரணம் விதிக்கப்பட்டதோ அவர்களுடைய உயிரைத் தன்னிடமே நிறுத்திக் கொள்கிறான். மற்றவர்களின் உயிர்களை குறிப்பிட்ட காலம் வரையில் (வாழ) அவர்களிடமே அனுப்பி விடுகிறான். கவனித்தறியக்கூடிய ஜனங்களுக்கு நிச்சயமாக இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன.

(அல்குர்ஆன் 39:42)

மேற்கண்ட வசனங்கள் மூலம் ஒவ்வொருவருக்கும் மரணம் நிச்சயம் வந்தே தீரும். என்பதை பார்த்தோம். அடுத்து நாம் மரணித்துவிட்டால் நமக்கு செய்ய வேண்டிய கடமை, பற்றியும், மறுமையில் உள்ள (சுவர்க்கம்/நரகம்) வாழ்க்கை பற்றி பார்ப்போம்.

நாம் இறந்து விட்டால், குளிப்பாட்டி, கபனிட்டு, விரைவாக சென்று நல் அடக்கம் செய்ய நபி(ஸல்) கூறினார்கள். மூன்று நாள் துக்கம் அனுஷ்டிக்கவும் கூறி உள்ளார்கள். மூன்றுநாள் இறந்தவர் வீட்டில் சமைப்பதை விட்டு அக்கம் பக்கம் உறவினர்கள் வீட்டில் சமைத்து கொடுக்கவும் கட்டளையிட்டுள்ளார்கள். இறந்த வீட்டில் ஒப்பாரி வைத்து அழுவதை கண்டித்துள்ளார்கள்.

எங்களிடம் நபி(ஸல்) அவர்கள் வாக்கு பிரமாணம் (பைஅத்) எடுக்கும் போது நாங்கள் மையத்திற்காக ஓலமிட்டு அழக்கூடாது என்றும் வாக்கு பிரமாணம் எடுத்தார்கள்.

*அறிவிப்பவர் : உம்மு அதிய்யா(ரழி)*

*நூல் : புகாரி, முஸ்லிம்*

அபூமூஸா(ரழி) அவர்கள் நோய்வாய்ப் பட்டு மயக்கத்திலிருக்கும் போது அவர் மனைவிகளில் ஒருவர் கூக்குரலிட்டு அழுதார். அவர் மயக்கம் தெளிந்த பிறகு தன் மனைவியை கண்டித்தார். துன்பங்களில் ஓலமிட்டு அழுவதையும், துயரங்களில் தனது தலையை சிரைத்துக் கொள்வதையும் தனது ஆடைகளை கிழித்துக் கொள்வதையும் விட்டு நபி(ஸல்) அவர்கள் விலக்கி இருந்தார்கள் என்று அபூமூஸா(ரழி) கூறினார்கள். (புகாரி)

மேற்கண்ட இரண்ட ஹதீஸ் மூலம், நோய்வாய் பட்டு மயக்கத்தில் இருந்தாலும், மரணித்து விட்டாலும் சத்தம் போட்டு ஒப்பாரி வைத்து அழுவதையும் வன்மையாக கண்டித்துள்ளார்கள் என்பதை விளங்கலாம்.

ஆனால் மார்க்கத்தை மக்களுக்கு போதித்து, நபிமார்களின் வாரிசுகள் என்று மார்தட்டி கூறும் முல்லாக்கள் ஆலிம்கள் உயிரோடு இருப்பவர்களிடம் கண்டதை கூறி கூலி வாங்கி வயிறு வளர்ப்பது போல், இறந்து விட்டாலும், அந்த வீட்டில் பிரியாணி பலவ்சோறு (ஜனஸா இருக்கும் போதே) சனமக்கவும், **3,7,40** என்ற பெயரில் ஹத்தம் பாத்திஹா ஓதி பணம் சம்பாதித்து மக்களை மடையர்களாக்கி, நாளை மறுமையில் நரகத்திற்கு செல்ல வழி காட்டுகின்றனர்.

இறந்தவர்களுக்கு எந்த பாத்திஹாவும், குர்ஆன், யாசீன் எப்படி ஓதினாலும் அவர்களுக்கு போய் சேராது. மாறாக இறந்தவர்களை சென்றடையும் விசயங்களை நபி(ஸல்) அவர்கள் தெளிவாக கூறி உள்ளார்கள்.

உள்ளார்கள்.

ஆதமின் மகனே! மனிதன் இறந்து விட்டால், அவனது செயல்களும், அதற்குரிய நன்மைகளும் நின்று விடுகின்றன, இருப்பினும் மூன்றைத்தவிர என்று நபி(ஸல்) கூறினார்கள்.

1. நிலையான தர்மம்

2. பயனுள்ள கல்வி

3. இவருக்காக இவரது ஸாலிஹான பிள்ளை செய்யும் துஆ.

*அறிவிப்பவர் அபூஹுரைரா (ரழி) நூல் முஸ்லிம்.*

இறந்தவர்களை சென்றடையும் 3 விசயங்களை தவிர வேறு எந்த பாத்திஹா, மௌலூது அவருக்கு போய் சேராது.

ஒருவர் உயிரோடு இருக்கும்வரை நல்லது கெட்டது எது செய்தாலும் அவரை விமர்சனம் செய்வதில், குறைகளை சுட்டிக் காட்டுவதில் தவறில்லை. ஆனால் ஒருவர் மரணித்து விட்டால் அவரைப் பற்றி குறை கூறுவதை நபி(ஸல்) அவர்கள் கண்டித்துள்ளார்கள், இறந்தவரின் ஜனஸாவில் கலந்து கொள்ளவும் கட்டளையிட்டுள்ளார்கள். அதற்குண்டான நன்மையையும் கூறி உள்ளார்கள்

இறந்தவர்களை திட்டாதீர்கள்; ஏனெனில் அவர்கள் என்னென்ன செய்தார்களோ அதன் பலனை அவர்கள் அடைந்து விட்டார்கள்.

*அறிவிப்பவர்: ஆயிஷா(ரழி) நூல் : அஹ்மத் புகாரி*

ஜனஸாவிற்கு வந்து ஜனஸா தொழும் வரை எவர் அங்கிருக்கிராரோ அவருக்கு ஒரு கிராத் நன்மை உண்டு. அடக்கம் செய்யும் வரை எவர் அங்கிருக்கிராரோ அவருக்கு இரண்டு கிராத் நன்மை உண்டு என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது இரண்டு கிராத் என்றால் என்ன**?** என்று நபித்தோழர்கள் கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் மிகப்பெரும் இரு மலைகளின் அளவு நன்மை என்றார்கள்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி)*

*நூல் : (புகாரி, முஸ்லிம்)*

சீ.கி. : கீராத் என்றால் உஹத் மலை அளவு நன்மை என்று நபி(ஸல்) கூறியதாக முஸ்லிம்,

இப்னுமாஜாவில் பதிவாகி உள்ளது.

ஒருவர் மரணித்து விட்டால் அவர் குடும்பத்தினருக்கு விருந்து சமைத்து கொடுக்க வேண்டும் என நபி(ஸல்) கூறினார்கள்.

ஜஃபர்(ரழி) அவர்கள் கொல்லப்பட்ட செய்தி வந்த போது நபி(ஸல்) அவர்கள் ஜஃபர்(ரழி) யின் குடும்பத்தாருக்கு நீங்கள் உணவு தயார் செய்யுங்கள். அவர்கள் கவலையில் உள்ளனர் என்று மக்களிடம் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அப்துல்லஹ் பின் ஜஃபர்(ரழி)*

*நூல் : அபூதாவூது, அஹ்மத், திர்மிதி.*

மனிதன் மரணித்த பின் கபுரில் வானவர்கள் கேள்விகள் கேட்பார்கள். உன் இரட்சகன் யார்? உன் மார்க்கம் என்ன? உன் நபி யார்? என்ற கேள்விகளுக்கு சரியான பதில் கூறினால் நீ புதுமாப்பிள்ளை போல் தூங்கு என்று கூறிவிட்டு செல்வார்கள். பிறகு மறுமை நாளில் தான் அல்லாஹ் அனைவரையும் எழுப்பி விசாரித்து நல்லவர்களுக்கு சுவர்க்கத்தையும், தீயவர்களுக்கு நரகத்தையும் கொடுப்பான். அதுவரை யார் நரகவாதி, யார் சுவர்க்கவாதி என்று நாம் அறியமாட்டோம். அல்லாஹ் மட்டுமே அறிவான். மறுமை நாள் பற்றி அல்லாஹ் குர்ஆனில் பல இடங்களில் கூறி உள்ளான். அவற்றை படித்து இவ்உலகில் நல் அமல்கள் செய்ய உங்களை அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

நபி(ஸல்) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தபோது ஒரு கிராமவாசி வந்து மறுமை நான் எப்பொது வரும் என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அமானிதம் வீணடிக்கப்பட்டால் ‘மறுமையை எதிர் பார் என்று சொன்னார்கள். அது எப்படி வீணடிக்கப்படும் என்று கேட்டார். தகுதியில்லாதவரிடம் ஒரு காரியம் ஒப்படைக்கப்பட்டால் ‘மறுமை நாளை எதிர் பார் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி)*

*நூல் : புகாரி.*

நபியே! யாவரையும் சூழ்ந்துக் கொள்ளக்கூடிய (மறுமையை)ப் பற்றிய செய்தி உமக்கு கிடைத்ததா?

அந்நாளில் சில முகங்கள் இழிவுபட்டு பயத்தால் வாடி அயர்ந்து போயிருக்கும். கொழுந்து விட்டெரியும் நெருப்பிற்கு அவை செல்லும். அவர்களுக்கு தாகித்தால் கொதிக்கும் ஓர் ஊற்று ஜலம் புகட்டப்படும்.

அதில் அவர்களுக்கு கருவேல முட்களைத் தவிர வேறொன்றும் ஆகாரமாக கிடைக்காது. அதனால் அவர்களின் தேகம் தழைக்கவுமாட்டாது. அவர்களுடைய பசியும் தீராது.

அந்நாளில் வேறு சிலமுகங்கள் மிக்க செழிப்பாக இருக்கும். (இம்மையில்) நாங்கள் செய்த நல்ல காரியங்களைப் பற்றித் திருப்தியடைந்து மேலான சுவபைதியிலிருக்கும். அதில் யாதொரு வீண் வார்த்தையும் செவியுற மாட்டாது.

அதில் இவர்கள் அருந்துவதற்கு சதா ஓடிக்கொண்டிருக்கும் தெளிவான ஒரு சுனை உண்டு. அதில் இவர்கள் அமர்வதற்கு உயர்ந்த ஆசனங்களும் உண்டு.

பலவகை இன்பமான பானங்கள் நிறைந்த கெண்டிகள் இவர்கள் முன் வைக்கப்பட்டிருக்கும். இவர்கள் சாய்ந்து கொள்வதற்காக திண்டு தலையனைகள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். இத்தகைய சுகபோகத்தில் நல்லடியார்கள் இருப்பார்கள் (அல்குர்ஆன் 89:1-16)

மேற்கண்ட வசனங்களில் வல்ல அல்லாஹ் மறுமையில் தீயவர்கள் நிலை எப்படி இருக்கும் நல்லவர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை கூறி உள்ளான். மேலும் பல வசனங்களில் மறுமை பற்றி கூறி மனித சமுதாயத்தை அச்சமூட்டி எச்சரிக்கிறான்.

(யுகமுடிவில்) வானம் வெடித்து, நட்சத்திரங்கள் சிதறி, சமுத்திரங்கள் அகற்றப்பட்டு, சமாதிகள் திறக்கப்பட்டால்(மரித்தோர் உயிர் பெற்றெழுந்து) ஒவ்வொர் ஆத்மாவும் தான் உலகத்தில் முன்னர் செய்து அனுப்பியதையும், உலகத்தில் தான் விட்டு வந்ததையும் நன்கு அறிந்து கொள்ளும்.

மனிதனே! உன்னை சிருஷ்டித்து மேலான விதத்தில் உருவகித்து மிக்க ஒழுங்காக உன்னை அமைத்த மிக்க கண்ணியமுள்ள உனதிறைவனைப் பற்றி உன்னை மயக்கி விட்டது எது?

*(அல்குர்ஆன்83:1 –7)*

உங்கள் செயல்களுக்குரிய கூலிகளை நீங்கள் பூரணமாக அடைவதெல்லாம் மறுமை நாளில்தான். ஆகவே அந்நாளில் எவர் நரக நெருப்பிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு சுவர்க்கத்தில் புகுத்தப் பெறுகிறாரோ அவர் நிச்சயமாக பெரும் பாக்கியத்தை அடைந்து விட்டார். இவ்உலக வாழ்க்கை மயக்கக்கூடிய அற்ப இன்பத்தை தவிற வேறில்லை.

*(அல்குர்ஆன் 3:185)*

எவர்கள் விசாரணைக் காலத்தில் அல்லாஹ்வை சந்திப்பதை பொய்யாக்குகின்றார்களோ, அவர்கள் நிச்சயமாக நஷ்டமடைந்தவர்களாகி விட்டனர். எதிர் பாராதவாறு திடுகூறாக அவர்களுக்கு விசாரணைக் காலம் வந்து விட்டால் அவர்கள் தங்கள் பாபச் சுமைகளை தங்கள் முதுகுகளின்மீது சுமந்தவர்களாக இந்நாளைப் பற்றி நாங்கள் நம்பாத குற்றத்தால் எங்களுக்கு ஏற்பட்ட துக்கமே என்று பிரலாபிப்பார்கள். அவர்கள் சுமந்து கொண்டிருப்பவை மிகக் கெட்டவையல்லவா?

*(அல்குர்ஆன் 6:31)*

மறுமையின் போது செவிடு படும்படியான பயங்கர சப்தம் ஏற்படுமானால் அந்நாளில் மனிதன் திடுக்கிட்டு தன் சகோதரனை விட்டும், தன் தாயை விட்டும், தன் தகப்பனை விட்டும், தன் மனைவியை விட்டும், தன் மக்களை விட்டும் வெருண்டோடுவான். அந்நாளில் அவர்களில் ஒவ்வொரு மனிதனுக்கும் மற்றவர்களைக் கவனிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும். எனினும் அந்நாளில் வேறுசில முகங்கள்மீது புழுதி படிந்து கிடக்கும், துக்கத்தால் இருள்அடைந்து கிடக்கும். இவர்கள் தாம் (மறுமையை) நிராகரித்து பாவம் செய்தவர்கள்.

*(அல்குர்ஆன் 80:36–**42**)*

மறுமையைப் பற்றி மேலும் பல வசனங்கள் உள்ளன. இன்னும் மறுமையை நம்பாமல் உள்ள முஸ்லிம்கள் பலர் உள்ளார்கள். இவர்களே நாம் தான் மரணித்து விடுவோமே, பிறகு நமக்கு எப்படி மறுமை பற்றி தெரியும் என்று விதண்டவாதம் கூறி திரிகிறார்கள். குர்ஆனை புரட்டி படிக்கும் யாரும் நாம் மரணித்து விட்டாலும் மண்ணோடு மண்ணாக மக்கி நம் உடல் மடிந்து போனாலும் வல்ல அல்லாஹ் நம்மை உயிர் கொடுத்து எழுப்புவான் என்பதை உணர்வார்கள். மறுமை வாழ்க்கை என்று ஒன்று உண்டு என்றும் நிச்சயமாக நம்புவார்கள். எனவே மறுமையை பயந்து இம்மையில் நல் அமல்கள் செய்ய முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் கூறுகிறான்: நபியே! எவர்கள் மறுமையில் தங்கள் இறைவனிடம் விசாரணைக்காக ஒன்று சேர்க்கப்படுவோம் என்று பயப்படுகின்றார்களோ அவர்கள் பாபத்திலிருந்து விலகி பரிசுத்தவான்களாகும் பொருட்டு நீர் எச்சரிக்கை செய்யும். அந்நாளில் அவர்களுக்கு உதவி செய்பவனும் பரிந்து பேசுபவனும் அவனைத் தவிர வேறுயாறும் இல்லை. *(அல்குர்ஆன்6:51)*

2002 ஜூன் **அந்நஜாத்**